மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதிகளை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அதிலே இடம் போதாமல் வெளியே இன்னும் இருக்கிறார்கள் ; அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இம்மாதிரியான மருந்தை ஊர்திகள் மூலமாக எடுத்துச் சென்று அந்தந்த இடங்களில் மருந்து கொடுத்து ஓரளவுக்கு அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 573—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—

(அ) மற்றும் (ஆ): ஆம். இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. இன்றைக்கு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் போல, அமைக்கவிருக்கும் மருத்துவப் பல்கலைக் கழககத்தை எந்த மாவட்டத்தில் அமைப்பது என்று அரசு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா? அப்படியிருந்தால் அதை அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பதிலிலேயே சொல்லியிருக்கிறேன் பரிசீலனையில் உள்ளது என்று. அதற்காக ஸ்பெஷல் ஆபீசர் ஒருவரை நியமித்து, என்னென்ன தேவைகள், எப்படிப்பட்ட தேவைகள், நில ஆர்ஜிதம் எவ்வளவு செய்ய வேண்டும் ; அதுமட்டுமல்லாமல், கட்டிட கன்ஸ்ட்ரக்ஷனுக்கு நமக்கு எவ்வளவு தொகை செலவாகும் ; equipment purchase, furniture ஆகியவற்றின் அமைப்பு எப்படியிருக்க வேண்டும் ; அப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்தால் அது எப்படி இருக்க வேண்டும் ஆகிய எல்லாவற்றையும் பற்றி ஸ்பெஷல் ஆபீசர் பரிசீலனை செய்தால், அதற்குப்பிறகு அம்மாதிரி ஒரு பல்கலைக் கழகத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

1981 மார்ச் 31]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்மாதிரி பல்கலைக் கழகம் ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நாம் சொல்ல இயலாது ; பரிசீலனைக்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்றும், கல்விக்குப் பல்கலைக் கழகம் என்றும், பொறியியல் பல்கலைக் கழகம் என்றும் இருக்கின்ற நேரத்தில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் '' என்ற அடிப்படையைக் கருதி, எல்லாவற்றிற்கும் முக்கியமானது இந்த மருத்துவத் துறை என்பதைக் கருத்திற் கொண்டு, இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை உடனடியாக ஏற்படுத்துவதற்கான பரிசீலனையை வேகமாகச் செய்து அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது நல்ல யோசனை. இதைத்தான் நான் சொன்னேன், முன் வர வேண்டுமென்றுதான் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் எல்லா சாத்திய கூறுகளையும் ஆராயலாம் என்று நான் சொன்னேன்.

பள்ளிச் சிறார்களுக்கு சலுகை பயணச்சீட்டு வழங்கும் திட்டம்.

*வினா எண். 574—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வழங்குவது போல் பள்ளிச் சிறார்களுக்கு மற்ற கழகங்களின் மூலம் பாஸ் கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு க. முத்துசாமி :

அதே போன்று இல்லை. எனினும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர, மற்ற போக்குவரத்துக் கழகங்களில் மாதாந்திர சலுகை பயணச் சீட்டுகள் வழங்கப் படுகின்றன.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு. எனவே இந்த ஆண்டில் ஊனமுற்ற பள்ளிச் சிறார்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.